

திருக்கோவிலூர் சட்டமன்ற தொகுதி ஏரளூர் பொதுமக்களின் கோரிக்கையான விழுப்புரத்திலிருந்து ஏரளூர் வழியாக திருவெண்ணெய்நல்லூர் அரசு கல்லூரி வரை செல்லும் புதிய பேருந்து வழித்தடத்தை கழக உயர்நிலை செயல்திட்டக்குழு உறுப்பினர் முன்னாள் அமைச்சர் முனைவர் க.பொன்முடி எம்.எல்.ஏ. மாணவர்களுடன் கொடி அசைத்து துவக்கி வைத்தார். நிகழ்ச்சியில் விழுப்புரம் தெற்கு மாவட்டப் பொறுப்பாளர் டாக்டர்.பொன்.கௌதமசிகாமணி, ஒன்றிய செயலாளர் பி.வி.ஆர்.சு.விசுவநாதன் உடனிருந்தனர்.



விருதுநகர் வடக்கு மாவட்டம் கௌசிகா மகாநதியை, மாவட்ட ஆட்சி தலைவர் மரு.என்.ஓ. சுகபுத்ரா தலைமையில் நீர்வளத்துறை சார்பில் புரனமைத்து, நவீன பணி மற்றும் தூர்வாரி. ரூ.22 கோடி அளவில் பணியை நிதி, சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றத்துறை அமைச்சர் தங்கம் தென்னரசு துவக்கிவைத்தார். உடன் சட்டமன்ற உறுப்பினர் ஏ.ஆர்.ஆர்.சீனிவாசன், மாவட்ட செயற்பொறியாளர் மலர் கொடி, நகர்மன்ற தலைவர் எஸ்.ஆர்.எஸ்.மாதவன், நகர தி.மு.க செயலாளர் எஸ்.ஆர்.எஸ்.தனபால், மாவட்ட விளையாட்டு மேம்பாட்டு அணி அமைப்பாளர் கே.ஜி.ராஜகுரு, அரசு போக்குவரத்து கழக பொதுசெயலாளர் ராஜசெல்வம், பொதுகுழு உறுப்பினர்கள் ஆர்.பி. மதியழகன், சுதாகர், தொழிலாளர் அணி முருகன், நகர துணைசெயலாளர் மரியராசு, செட்டி காஜா, புலிநாயக்கர் மற்றும் பொதுமக்கள் அனைவரும் கலந்துகொண்டனர்.


### நாளை (7ம்தேதி) முத்தமிழறிஞர் தலைவர் கலைஞரின் ஏழாம் ஆண்டு நினைவு நாள்!

# மீண்டும் திராவிட மாடல் ஆட்சி அமைய உறுதி ஏற்போம்!

## அமைச்சர் கே ஆர். பெரிய கருப்பன் அறிக்கை!

சிவகங்கை, ஆக. 6 -

நாளை முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் அவர்களின் 7வது ஆண்டு நினைவு தினம் குறித்து அமைச்சர் கே.ஆர்.பெரியகருப்பன் விடுத்துள்ள அறிக்கையில் கூறியுள்ளதாவது. தமிழினத்தலைவர் கலைஞர் அவர்கள் அரசியலில் மையப்புள்ளியாக விளங்கியவர். தனது 14 வயது முதல் வாழ்வின் இறுதி நாள் வரை தமிழகத்தின் வளர்ச்சிக்காகவும், தமிழர்களின் நலன்களுக்காகவும், தமிழ் மொழிக்காகவும் அயராது பாடுபட்டவர். தலைவர் கலைஞர் அவர்கள் அனைத்து துறைகளிலும் வித்தகராக விளங்கினார். தலைவர் கலைஞர் அவர்கள் ஐந்து முறை முதல்வராக இருந்த பொழுது தமிழகத்தில் வளர்ச்சிக்கு பல்வேறு கட்டமைப்பை உருவாக்கினார். அவர் உருவாக்கிய கட்டமைப்பு இன்று தமிழகத்தின் வளர்ச்சிக்கு அடித்தளமாக அமைந்துள்ளது. பேரறிஞர் அண்ணா,தந்தை பெரியார் வழியில் தமிழர்களின் உரிமைக்காக குரல் கொடுத்தவர் உத்தம தலைவர் கலைஞர் . ஆவார். அவரது அரசியலை தமிழகம் மட்டுமின்றி இந்திய அளவிலான பல்வேறு அரசியல் கட்சித் தலைவர்கள் ஆதரித்துள்ளார்கள். தனது கடைசி மூச்சு வரை தமிழினத்தின் முன்னேற்றத்திற்காக அயராது பாடுபட்ட தலைவர் கலைஞர் அவர்களின் ஏழாம் ஆண்டு நினைவு நாள் நாளை 7ம்தேதி அனுசரிக்கப்படுகிறது .. சிவகங்கை மாவட்டத்தில் உள்ள ஒன்றிய ,நகர, பேரூர் கழகங்கள் அனைத்து, ஊராட்சிகளில்



தலைவர் கலைஞர் அவர்களின் திருஉருவப்படத்திற்கு மலர் மாலை அணிவித்து மரியாதை செலுத்துமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். கழக தலைவர் முதல்வர் தளபதி அவர்களின் திராவிட மாடல் ஆட்சியின் நான்கரை ஆண்டு சாதனைகளை மக்களிடம் எடுத்து கூறும் வகையில் துண்டு பிரசுரங்கள் வழங்கியும் , திராவிட மாடல் அரசு 2026 தேர்தலில் மீண்டும் ஏழாவது முறையாக ஆட்சியைப் பிடிக்கும் வகையில் மக்களிடம் எடுத்துக்கூற வேண்டும். இரண்டாவது முறையாக கழகத் தலைவர் தளபதி ஸ்டாலின் அவர்கள் முதல்வராக ஆட்சியில் அமர வேண்டும் . நமது உன்னத தலைவர் முத்தமிழ் அறிஞர் கலைஞர் நினைவு நாளில் நாம் அனைவரும் உறுதிமொழி ஏற்க வேண்டும். அந்தந்த பகுதியில் உள்ள மாவட்ட கழக நிர்வாகிகள், ஒன்றிய, நகர, பேரூர்கழக நிர்வாகிகள் செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், சார்புஅணி நிர்வாகிகள் பொதுமக்களும் இணைந்து தலைவர் நினைவு நாளில் கலைஞர் ஆட்சி மீண்டும் அமைய சபதம் ஏற்போம்.

இவ்வாறு அமைச்சர் கேஆர்.பெரிய கருப்பன் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

### மதுரை தெற்கு மாவட்ட தி.மு.க. சார்பில் முத்தமிழறிஞர் தலைவர் நினைவு நாள்

# திருமங்கலத்தில் 7ஆம் தேதி அமைதிப் பேரணி!

## தெற்கு மாவட்ட செயலாளர் சேடபட்டி மு .மணிமாறன் அறிக்கை!

மதுரை, ஆக.6-

மதுரை தெற்கு மாவட்ட தி.மு.க. சார்பாக முத்தமிழ் அறிஞர் தலைவர் கலைஞர் அவர்களின் ஏழாவது நினைவு தினத்தை முன்னிட்டு நாளை 7 ஆம் தேதி திருமங்கலத்தில் அமைதி பேரணியாக சென்று கழக அலுவலகத்தில் அன்னாரது திருவுருவப்படத்திற்கு

மாலை அணிவித்து மரியாதை செலுத்தப்பட உள்ளதாகவும் இதில் கழகத்தினர் பெரும் திரளாக பங்கேற்க வேண்டும் என தெற்கு மாவட்ட செயலாளர் சேடபட்டி மு.மணிமாறன் தமது அறிக்கையின் மூலம் தெரிவித்துள்ளார் அதன் விபரம்

உலகத் தமிழர்களின் ஒப்பற்ற தலைவராக விளங்கிய, தமிழினத் தலைவர், முன்னாள் முதல்வர் கலைஞர் அவர்களின் 7வது நினைவு நாளையொட்டி நாளை 7ஆம் தேதி வியாழக்கிழமை அன்று காலை 9 மணிக்கு மறவன்குளம் பேருந்து நிறுத்தத்தில் இருந்து மதுரை தெற்கு மாவட்ட தி.மு.க. அலுவலகம் வரை அமைதிப் பேரணியாக சென்று மதுரை தெற்கு மாவட்ட கழக அலுவலகத்தில் மலர்களால் அலங்கரிக்கப்பட்ட முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் அவர்களின்திருவுருவப்படத்திற்கு மாலை அணிவித்து மலர் தூவி மரியாதை செலுத்தபட உள்ளது

இந்நிகழ்வில் மதுரை தெற்கு மாவட்ட கழக நிர்வாகிகள், தலைமைச் செயற்குழு பொதுக்குழு உறுப்பினர்கள், சார்பு அணிகளின் மாநில நிர்வாகிகள், ஒன்றிய நகர பகுதி பேரூர் செயலாளர்கள் நிர்வாகிகள் மாவட்ட பிரதிநிதிகள்,



வட்ட வார்டு கிளைக் கழக செயலாளர்கள் நிர்வாகிகள், அனைத்து அணியின் மாவட்ட ஒன்றிய நகர பகுதி பேரூர் அமைப்பாளர்கள், தலைவர்கள் துணைத் தலைவர்கள், மற்றும் துணை அமைப்பாளர்கள், உள்ளாட்சி அமைப்புகளின் இந்நாள் முன்னாள் பிரதிநிதிகள், கழக முன்னோடிகள், பாக முகவர்கள், பூத் கமிட்டி உறுப்பினர்கள், உயிரினும் மேலான கழக உடன்பிறப்புகள் என அனைவரும் முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் அவர்களின் நினைவு நாள் அமைதிப் பேரணியில் அன்னாரின் நினைவை போற்றி அஞ்சலி செலுத்த பெருந்திரளாக கலந்து கொள்ளுமாறும்,

மேலும் ஒன்றிய நகரப் பகுதி பேரூர் மற்றும் வட்ட வார்டு கிளைக் கழகங்கள் தோறும் தமிழினத் தலைவர் முத்தமிழறிஞர் தலைவர் கலைஞரின் அவர்களின் சாதனைகளை எடுத்துக் கூறி அன்னாரின் திருவுருவப்படத்திற்கு கழக நிர்வாகிகள் அனைவரும் மாலை அணிவித்து மரியாதை செலுத்துமாறும் தெற்கு மாவட்டச் செயலாளர் சேடபட்டி மு .மணிமாறன் தமது அறிக்கையின் மூலம் கழகத்தினருக்கு வேண்டுகோள் விடுத்துள்ளார்.

### இராணிப்பேட்டை மாவட்டம்

# வாலாஜா அறிஞர் அண்ணா அரசு கல்லூரி பட்டமளிப்பு விழா!

## தமிழ்நாடு உயர் கல்வியில் முன்னிலை அமைச்சர்கள் ஆர்.காந்தி – கோவி.செழியன் பங்கேற்று பட்டங்களை வழங்கினார்கள் !

இராணிப்பேட்டை, ஆக.6-

இராணிப்பேட்டை மாவட்டம் வாலாஜாஅறிஞர் அண்ணா அரசினர் மகளிர் கலைக்கல்லூரி இயங்கி வருகிறது.

இக்கல்லூரியில் 46 மற்றும் 47வது பட்டமளிப்பு விழா நடைபெற்றது.

வேலூர் மண்டல கல்லூரி கல்விஇணை இயக்குனர் மலர், டி.ஆர்.ஒ .தனலிங்கம், மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் ஆற்காடு சட்டமன்ற உறுப்பினர் ஜே.எல்.ஈஸ்வரப்பன், ஆகியோர் முன்னிலை வகித்தனர். கல்லூரியின் முதல்வர் நசீம்கான் அனைவரையும் வரவேற்று பேசினார்.

இந்நிகழ்ச்சியில் சிறப்பு அழைப்பாளராக கைத்தறி மற்றும் துணி நூல் துறை அமைச்சர் இராணிப்பேட்டை மாவட்டக் கழகச் செயலாளர் ஆர். காந்தி, தமிழ்நாடு உயர் கல்வித்துறை அமைச்சர் கோவி. செழியன் ஆகியோர் கலந்து கொண்டு 2054 இளநிலை மற்றும் 394 முதல் நிலை என 2450 மாணவிகளுக்கு பட்டங்களை வழங்கினார்கள். தொடர்ந்து அமைச்சர் காந்தி பேசியதாவது :

கடந்த 1968 ஆம் ஆண்டு வாலாஜா அறிஞர் அண்ணா அரசு மகளிர் கலைக் கல்லூரி தொடங்கப்பட்டது.

தமிழ்நாடு முதலமைச்சர் தளபதி மு.க.ஸ்டாலின் அவர்கள் கல்லூரி மாணவிகளுக்கு ஏராளமான திட்டங்களை நிறைவேற்றி வருகிறார். இந்தியாவிலேயே அனைத்து துறைகளிலும் தமிழ்நாடு சிறந்து விளங்குகிறது என கூறினார். அதைத் தொடர்ந்து உயர்கல்வி துறை அமைச்சர் கோவி. செழியன் பேசியதாவது:

தமிழ்நாட்டின் வளர்ச்சிக்காக முதல்வர்மு.க.ஸ்டாலின் பாடுபட்டு வருகிறார் உயர்கல்வி படிப்பதில் இந்தியாவிலேயே தமிழ்நாடு தான் முன்னணியில் உள்ளது .ஆண்களை விட பெண்கள் தான் அதிக அளவில் பட்டதாரிகளாக உருவாகி வருகின்றனர். உயர் கல்வி படிப்பு என எல்லாவற்றிலும் மாணவிகளின் பங்களிப்பும் சாதனையும் மகத்தானது . ஏழை மாணவர்கள் பட்டதாரி மற்றும் உயர் கல்வி படிக்க வேண்டும் என்ற எண்ணத்தில் முதல் தலைமுறையை சேர்ந்தவர்களுக்கு ஐந்து சதவீத இட ஒதுக்கீடு தலைவர் கலைஞர் ஆட்சியில் வழங்கப்பட்டது . இதன் மூலம் இக்கல்லூரியில் 1500 மாணவிகள் தற்போது பட்டம் பெறுகிறார்கள்.

முதல்வர் மு.க.ஸ்டாலின் பொறுப்பேற்று இதுவரை 15 புதிய கலை கல்லூரிகள் தொடங்கப்பட்டுள்ளது. கல்லூரிகளில் கூடுதலாக 20 சதவீதம் இருக்கைகள் உயர்த்தப்பட்டுள்ளது அரசு பள்ளியில் படித்து உயர் கல்வி படிக்கும் பெண்களுக்காக புதுமைப்பெண் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது .

நான் முதல்வர் திட்டம் உள்ளிட்டவை மாணவிகளின் எதிர்கால கனவை பூர்த்தி செய்துள்ளது. எத்தனை இடையூறுகள் வந்தாலும் அவற்றை எல்லாம் எதிர்கொண்டு உயர் கல்விக்காக தமிழ்நாடு அரசு அதிக முக்கியத்துவம் கொடுத்து வருகிறது. இவ்வாறு அவர் பேசினார். இதில் கல்லூரி துணை முதல்வர்பூங்குழலி, மாவட்ட ஊராட்சி குழு தலைவர் ஜெயந்தி திருமூர்த்தி, வாலாஜா ஒன்றிய குழு தலைவர் சேஷா வெங்கட்ரமணன் மற்றும் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

# முத்தமிழ் அறிஞர் கலைஞரின் ஏழாம் ஆண்டு நினைவு தினம்!

## மாவட்டக் கழகச் செயலாளர் காதர்பாட்சா முத்துராமலிங்கம் எம்.எல்.ஏ., அறிவிப்பு!

இராமநாதபுரம், ஆக.6-

கழக தலைவர் - தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைக்கிணங்க, கழக இளைஞர் அணி செயலாளர், துணை முதலமைச்சர் இளந்தலைவர் அவர்களின் அறிவுறுத்தலின்படி முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் ஏழாம் ஆண்டு நினைவு தினத்தை நாளை (07.08.2025) முன்னிட்டு இராமநாதபுரம் மாவட்ட கழகம் சார்பில் அனைத்து கிளை, வார்டு கழகங்கள்



தோறும் “புகழஞ்சலி” செலுத்தும் நிகழ்வு நடைபெற உள்ளது. ஆகவே இராமநாதபுரம் மாவட்டத்தில் உள்ள மாநில. மாவட்ட நிர்வாகிகள், தலைமைச் செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், ஒன்றிய, நகர, பேரூர் கழக செயலாளர்கள், நிர்வாகிகள், அனைத்து ஊரக மற்றும் நகர்புற உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதி கள். அனைத்து அணிகளின் நிர்வாகிகள், கிளைக் கழக, வார்டு கழக செயலாளர்கள், வாக்குச்சாவடி நிலைக் குழு முகவர்கள் (BLA2), பூத் கமிட்டி உறுப்பினர்கள் (BLC) மற்றும் நிர்வாகிகள் உள்ளிட்ட கழக முன்னோடிகள், கழக தோழர்கள், அனைவரும் அவரவர் எல்லைக்குட்பட்ட கிளை, வார்டு கழகங்கள் தோறும் முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் திருவுருவப் படத்திற்கு மலர்தூவி புகழஞ்சலி செலுத்திடுமாறு கேட்டு கொள்கிறேன்.

இவ்வாறு அவர் அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

### நெல்லை மத்திய மாவட்டத்தில்

# முத்தமிழறிஞர் கலைஞரின் 7ஆம் ஆண்டு நினைவுநாள் நிகழ்ச்சி!

## மாவட்டப் பொறுப்பாளர் மு. அப்துல் வகாப் எம்.எல்.ஏ. அறிக்கை!

நெல்லை, ஆக.6-

தமிழினத் தலைவர் முத்தமிழ் அறிஞர் தலைவர் கலைஞர் அவர்களின் 7 ம் ஆண்டு நினைவு தினத்தை முன்னிட்டு நாளை 7 ம் தேதி நெல்லை மத்திய மாவட்ட தி.மு.க சார்பில் வண்ணாரப்பேட்டை மாவட்ட கழக அலுவலகத்தில் அலங்கரித்து வைக்கப்பட்டுள்ள கலைஞர் அவர்களின் திருவுருவ படத்திற்கு காலை 10.00 மணிக்கு,

மலர் தூவி,புகழஞ்சலி செலுத்தும் நிகழ்வு நடைபெறுகிறது.மேலும் மத்திய மாவட்டம் முழுவதும் கலைஞர் அவர்களின் புகழ் நிலைத்து நிற்கும் வகையில் முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் திருவுருவ



படத்திற்கு மாலை அணிவித்து புகழஞ்சலி செலுத்த வேண்டும்.என நெல்லை மத்திய மாவட்ட பொறுப்பாளர் மு.அப்துல்வகாப் எம்.எல்.ஏ. வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இது தொடர்பாக அவர் அறிவிப்பில் தெரிவித்திருப்பதாவது.

தமிழினத்தின் முன்னேற்றத்தில் ஆழ்ந்த அக்கறை கொண்டு,தனது தூர நோக்கு சிந்தனையால்,திடசித்தத்தால்,இந்த சமூகம் நமக்கு நன்றியோடு நடந்து கொள்கிறதோ இல்லையோ, “என் கடன் பணி செய்து கிடப்பதே”என்ற லட்சியத்தோடு,தமிழினத்தின் அனைத்து வகையான முன்னேற்றத்தையும், நாளும்பொழுதும், அணு அணுவாய் சிந்தித்து, திட்டங்கள் தீட்டி,சட்டங்கள் இயற்றி,தமிழ்நாடு அனைத்திலும் முதன்மையாக, முன்மாதிரி மாநிலமாய் திகழ அடி கோலிய “நவீன தமிழகத்தின் சிற்பி” தலைவர் முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களை,தமிழ் நாடு நன்றியோடு நினைவில் கொள்ளும்,தமிழ்ச் சமூகம் நிலைத்திருக்கும் காலமெல்லாம் அவர்கள் வாழும் இடங்களிலெல்லாம், தமிழினம் ஏற்றம் பெற ஏணியாய் உழைத்த தலைவர் கலைஞர் புகழ் நிலைத்திருக்கும் என்பதை உணர்த்தும் விதமாக நடைபெற வேண்டும்.

அதன்படி நெல்லை மத்திய மாவட்டத்தின் ஒவ்வொரு வார்டுகளிலும்,ஒன்றிய கிளைகளிலும், ஆங்காங்கே முத்தமிழ் அறிஞர் தலைவர் கலைஞர் அவர்களின் திருவுருவப்படத்தை அலங்கரித்து வைத்து, மலர் தூவி,மாலை அணிவித்து புகழஞ்சலி செலுத்திட கேட்டுக்கொள்கிறேன்.

இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

### தென்காசி வடக்கு மாவட்டத்தில்

# முத்தமிழறிஞர் கலைஞர் 7ஆம் ஆண்டு நினைவுநாள் நிகழ்ச்சி!

## மாவட்டச் செயலாளர் ஈ.ராஜா அறிக்கை!

தென்காசி.ஆக.6-

தென்காசி வடக்கு மாவட்ட தி.மு.க சார்பில் முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் 7ம் ஆண்டு நினைவு நாள் முன்னிட்டு தென்காசி வடக்கு மாவட்டம் சிவகிரி பேரூர் கழக அலுவலத்திலிருந்து அமைதிப் பேரணி புறப்பட்டு ராஜபாளையம் சாலையில் உள்ள வேல்கேர் மருத்துவமனையில் வளாகத்தில் உள்ள முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் சிலை வரை நடைபெறுகிறது. மாவட்டம் முழுவதும் முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் திருஉருவப் படத்திற்கு மலர் தூவி புகழுஞ்சலி செலுத்த வேண்டும் என தென்காசி வடக்கு மாவட்டச் செயலாளர்



ஈ.ராஜா எம்.எல்.ஏ. வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இது தொடர்பாக அவர் அறிவிப்பில் தெரிவித்திருப்பதாவது.

திராவிட இயக்கத்தின் பாதுகாவலராக தமிழினத்தில் அழியா சொத்தாக ஐந்து முறை தமிழகத்தின் முதலமைச்சராக உலகமே போற்றும் பன்முகத் தலைவர் செம்மொழி நாயகர் நம் நெஞ்சமெல்லாம் நிறைந்து நிற்கும் தமிழினத் தலைவர் கலைஞர் அவர்களின் நினைவு நாள் 7ம் தேதி ஆகும்.

உலகெங்கும் வாழும் தமிழர்களின் நெஞ்சங்களில் நிலைத்து வாழும் முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்கள் நினைவு நாளையொட்டி நாளை 7ம் தேதி காலை 7 மணி அளவில் தென்காசி வடக்கு மாவட்ட தி.மு.க சார்பில் சிவகிரி பேரூர் கழக அலுவலகத்தில் இருந்து (எனது தலைமையில்) அமைதிப் பேரணியாக புறப்பட்டு ராஜபாளையம் சாலையில் உள்ள வேல்கேர் மருத்துவமனை வளாகத்தில் உள்ள முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் சிலை வரை சென்று அங்கு புகழஞ்சலி செலுத்தப்படுகிறது.

இந்நிகழ்வில் மாநில, மாவட்ட, தலைமைச் செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், ஒன்றிய, நகர,பேரூர் கழகச் செயலாளர்கள் அனைத்து சார்பு அணிகளின் அமைப்பாளர்கள், நிர்வாகிகள், உள்ளாட்சிப் பிரதிநிதிகள்,கழகத் தொண்டர்கள் திரளாக கலந்து கொள்ள வேண்டும்.

மேலும் தென்காசி வடக்கு மாவட்டம் முழுவதும் முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் புகழ் நிலைத்து நிற்கும் வகையில் கலைஞர் அவர்களின் திருவுருவப் படத்திற்கு மாலை அணிவித்து மலர் தூவி புகழஞ்சலி செலுத்தப்பட வேண்டும்.

இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.



தேனி தெற்கு மாவட்டம் கம்பம் நகராட்சிப் பகுதிகளில் கலைஞர் நகர் புற மேம்பாட்டுத்திட்டத்தின் கீழ் வணிக வளாகம் கட்டும் பணிகளை கம்பம் நகர் மன்ற தலைவர் வனிதா நெப்போலியன் நேரில் ஆய்வு செய்தார். ஆய்வின் போது நகராட்சி ஆணையாளர் உமா சங்கர், பொறியாளர் அய்யனார், உதவிபொறியாளர் சந்தோஷ், மற்றும் வார்டுபொதுமக்கள் , நகராட்சி ஒப்பந்ததாரர்கள் உடனிருந்தனர்.